

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.7.2025) சென்னையில் நடைபெற்ற உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களின் மகள் எஸ். தீப்தா – ஈ. சிவபிரதீப் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின், கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ஆர். பாலு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.7.2025) கழக துணை பொதுச் செயலாளரும், மாநிலங்களவை குழுத் தலைவருமான திருச்சி சிவா அவர்களுக்கு சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஒதுக்கப்பட்டுள்ள இருக்கையில் அமர்த்தினார். உடன் கழக பொதுச் செயலாளரும், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சருமான துரைமுருகன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினரும், துணை அமைப்புச் செயலாளருமான தாயகம் கவி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.7.2025) முகாம் அலுவலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா தனது பிறந்தநாளையொட்டி மனைவியுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (12.7.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில் கழக கல்வியாளர் அணியின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தலைமை நிலையச் செயலாளர் துறைமுகம் காஜா உள்ளனர்.

# வள்ளுவர் மறை; வைரமுத்து உரை !

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிடுகிறார்!

**சென்னை, ஜூலை 13-**

**‘வள்ளுவர் மறை வைரமுத்து உரை’ என்ற பெயரில் கவிப்பேரரசு வைரமுத்து திருக்குறளுக்கு உரை எழுதியிருக்கிறார். இன்று (13.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்குச் சென்னை காமராசர் அரங்கத்தில் நூல் வெளியிடப்படுகிறது.**



தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்று நூலை வெளியிடுகிறார். இந்தியப் பேரரசின் முன்னாள் நிதியமைச்சரும் மற்றும் உள்துறை அமைச்சருமான ப.சிதம்பரம் எம்.பி நூலின் முதற்படியைப் பெற்றுக்கொள்கிறார். தமிழ்நாடு அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு ஐ.ஏ.எஸ் மற்றும் தமிழ்ப் பேராசிரியர் பர்வீன் சுல்தானா இருவரும் வாழ்த்திப் பேசுகிறார்கள். நிறைவாக கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.

திருக்குறளுக்குக் காலந்தோறும் உரை எழுதப்பட்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் தாம்கற்ற கல்வி சார்ந்த கொள்கை சமுதாயச் சூழலுக்கு ஏற்ப உரையாசிரியர்கள் உரை எழுதி வந்திருக்கிறார்கள். தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதியார், பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காலிங்கர் பிற்காலத்தில் வ.உ.சிதம்பரனார், திரு.வி.கல்யாணசுந்தரனார், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், ஞா.தேவநேயப் பாவாணர், நாமக்கல் கவிப்பேரரசு, மு.வரதராசனார், புலவர் குழந்தை, சி.இலக்குவனார், கலைஞர், நாவலர் என்று பலரும் உரை எழுதியிருக்கிறார்கள்.

தாம் எழுதிய உரை மாறுபட்டது என்று கவிப்பேரரசு வைரமுத்து தெரிவிக்கிறார். அறிவியலுக்காக எழுதப்பட்ட திருக்குறளுக்கு அறிவியலின்படி உரை எழுதியிருப்பதாக அறிவிக்கிறார். இது டிஜிட்டல் தலைமுறைக்கானது; மின்னல் தெறிக்கும் மொழியில் எழுதப்பட்டது; எளிமையும் துல்லியமும் உடையது; பண்டிதரையும் பாமரரையும் ஒருசேரச் சென்றடைவது. அறத்துப்பாலும் பொருட்பாலும் ஞானத் தமிழில் எழுதப்பட்டது; இன்பத்துப்பால் கவிதை மொழியில் எழுதப்பட்டது என்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து.

மூலத்தைவிடப் பல உரைகள் கடினமாக இருக்கின்றன என்பது பொதுவான குற்றச்சாட்டு. ஆனால், இது இலகுவான மொழியில் கவிதை கொஞ்சும் நடைமுறைத் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்பதனால் எவரும் படிக்க இயலும். ஒவ்வொரு தமிழரின் உள்ளத்திலும் இல்லத்திலும் இந்நூல் இருக்க வேண்டும் என்பது தன் இலக்கியக் குறிக்கோள் என்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து. ‘12 வயதில் நான் கண்ட கனவு 72 வயதில் நனவாகி இருக்கிறது’ என்று சொல்லும் கவிப்பேரரசு வைரமுத்து, என் பிறவிப் பெரும்கடமை நிறைவேறி இருக்கிறது என்கிறார்.

### ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் அளிக்காத ஒன்றிய அரசின்

# தேசிய கல்விக் கொள்கை மக்களின் விருப்பங்களுக்கு எதிராக உள்ளது!

## ‘தி இந்து’ ஆங்கில நாளிதழ் தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, ஜூலை 13–

‘English Dreams: On language debate and English medium education’ எனும் தலைப்பில் “தி இந்து’ ஆங்கில நாளிதழ் தலையங்கம் வெளியிட்டுள்ளது. அதில், ஆங்கில வழிக் கல்வி இந்தியர்களின் ஒரு விருப்பமாக உள்ளதாகவும், ஆனால் கற்பித்தல் மொழி தொடர்பான கொள்கை,

நாடு முழுவதும் சீரற்றதாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மும்மொழிக் கொள்கையை அமல்படுத்த ஒன்றிய பா.ஜ.க. அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கையின் காரணமாக எழுந்துள்ள விவாதத்தில் பயிற்று மொழியும் ஒன்று என “தி இந்து” தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்மொழிக் கல்வி, குழந்தைகளின் ஆரம்பகால வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிப்பதை கல்வியாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் இதனை கல்வியியல் ஆராய்ச்சி உறுதி செய்துள்ளது பயிற்று மொழியை தேர்வு செய்வது அரசியல் அமைப்பின் அடிப்படை உரிமை இதனை மறுக்கும் உரிமை ஒன்றிய அரசுக்கு இல்லை என்று “தி இந்து’ ஆங்கில நாளிதழ் தெரிவித்துள்ளது.

ஒன்றிய அரசு தீவிரமாக முன்னெடுக்கும் தேசிய கல்விக் கொள்கை, ஆங்கில எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும், இது மக்களின் விருப்பங்களுக்கு எதிரானது என்றும் இத்தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது. தங்களின் பிராந்திய மொழி மற்றும் கலாச்சாரத்தை ஊக்குவிக்க விரும்பும் மாநிலங்கள், ஆங்கிலக் கல்வியையும், ஆங்கிலத்தை ஒரு பயிற்று மொழியாகவும் ஊக்குவிக்க விரும்புவதாகவும், தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் கேரளாவில் அரசு உதவி பெறும் ஆங்கில வழிப் பள்ளிகள் உள்ளதாகவும், ஆங்கில வழிக் கல்விக்கான தேவை இந்தி பேசும் மாநிலங்களிலும் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்துள்ள ”தி இந்து தலையங்கம், பெரும்பாலும் தரமற்ற மற்றும் அதிக கட்டணம் வசூலிக்கும் தனியார் நிறுவனங்கள் இதன் மூலம் பயன்பெறுவதாகவும் சுட்டிக்காட்டி உள்ளது.

உலகளாவிய சேவைத் துறைகளில் தனிநபர்களும் நாடுகளும் தங்களுக்கான இடத்தை பெறுவதில் ஆங்கிலத் திறன் உதவி உதவுகின்றன இந்தியாவில், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆங்கிலக் கல்வி மூலம் தங்களுக்கான அதிகாரத்தை பெறவும், முன்னேற்றத்திற்கான கருவியாக உள்ளது என்று தி இந்து தலையங்கம் தெரிவித்துள்ளது. அரசுப் பள்ளிகள் ஆங்கில வழிக் கல்வியை வழங்கவில்லை என்றாலும், வசதி படைத்த குடும்பங்கள் தனியார் பள்ளிகள் மூலம் அதனை பெறும் நிலை உள்ளதாகவும், இதன் காரணமாக கல்வி என்பது சமூக ஏற்றத்தாழ்வுகளை மேலும் மோசமாக்கும் என்றும், இது சமூக நலன்களுக்கு நேர் எதிரானது எனறும் இத்தலையங்கம் தெரிவித்துள்ளது.

ஆங்கில அறிவு, அதிகாரம் அளிப்பதற்கும், முன்னேற்றத்திற்கான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும், ஆரம்பக் கல்வி நிலையில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்க வேண்டுமா என்பது குறித்து விவாதம் தேவை என்றும் தெரிவித்துள்ள தி இந்து தலையங்கம், மிகவும் பின்தங்கிய பிரிவு மக்கள், அவர்களின் லட்சியங்களையும், முன்னேற்றத்தையும் அடைவதற்கு உதவும் வகையில் அரசுகளின் கொள்கைகள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளது.

# தி.மு.க. ஆட்சிதான் 2026ல் என்பதை எடப்பாடியே உணர்ந்திருக்கிறார் !

